
பாலினம் சார்ந்த வன்முறை, குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள், குழந்தைத் திருமணத்தில் உள்ள மனித உரிமை மீறல்கள், நம் துறை சார்ந்து நாம் செய்ய வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்தப் பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே துறையைச் சார்ந்த முதன்மைப் பயிற்றுநர்கள் தங்கள் துறை சார்ந்தவர்களோடு உரையாடுவதற்கு, அதாவது சமூக நலத்துறையினர் தங்களது துறை சார்ந்தவர்களுடன் உரையாடுவதற்கு இந்தப் பயிற்சிக் கையேடு உதவும்.

இளந்தென்றல்

குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வருவோம்!

இளந்தென்றல்

# பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலருக்கான பயிற்சிக் கையேடு



unicef
for every child

வாய்மையே வெல்லும்

# பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலருக்கான பயிற்சிக் கையேடு

இளந்தென்றல்

வளரிளம் பருவத்தினரின்
தன்னுரிமை மேம்பாடு மற்றும் குழந்தைத் திருமணத்தை
முடிவுக்குக் கொண்டு வரும் திட்டத்துக்கான கருத்துப் பெட்டகம்

unicef for every child

வாய்மையே வெல்லும்

பாலினம் சார்ந்த வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் பற்றி  குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலருக்கான பயிற்சிக் கையேடு

Gender Based Violence and Ending Child Marriage:

Toolkit for CMPO/Social Welfare Officer

முதல் பதிப்பு: மார்ச், 2020

First Edition: March, 2020

வெளியீடு :

மாநில கருவூல மையம், சென்னை - 600 020.

State Resource Centre, Chennai - 600 020.

Email: sbtamilnadusrc@gmail.com

044-24914147

வடிவமைப்பு:

THY Designers & Computers

Triplicane, Chennai - 600 005

044-42113807

# அறிமுகம்

குழந்தைத் திருமணத் தடுப்பு அதிகாரிகள், காவல் துறையினர், குழந்தை நலக் குழுவினர், முன்னணிக் களப் பணியாளர்கள், பஞ்சாயத்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், பள்ளி ஆசிரியர்கள், கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினர் குழந்தைத் திருமணத் தடுப்புப் பணியில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகிறார்கள். நாம் தொடர்ந்து மிகவும் கடினமாகப் போராடியும்கூட குழந்தைத் திருமணங்கள் நடப்பதை முற்றிலுமாக தடுத்து நிறுத்திவிட முடியவில்லை. குழந்தைத் திருமணம் என்ற தவிர்க்கப்பட வேண்டிய மோசமான நிகழ்விற்கு பின்னால் உள்ள சமூக விதிகள் மற்றும் பாலின வேறுபாடுகள் சார்ந்த நமது மதிப்பீடுகள்தான் இதற்குக் காரணம்.

குழந்தைத் திருமணத் தடுப்பு செயல்பாடுகளில் ஈடுபட்டு உள்ள நமக்கேகூட பாலினம் சார்ந்த வன்முறைகள் பற்றியும், குழந்தைத் திருமணத்திற்கான சமூக, கலாச்சார காரணங்கள் குறித்தும் பல்வேறு விதமான பார்வைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே, குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்கான சட்டங்கள் குறித்தும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் தெரிந்து கொள்வதுடன், குழந்தைத் திருமணம் என்பது எப்படி பாலினம் சார்ந்த வன்முறையாக உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

பாலினம் சார்ந்த வன்முறை, குழந்தைத் திருமணத்திற்கான காரணங்கள், குழந்தைத் திருமணத்தில் உள்ள மனித உரிமை மீறல்கள், நம் துறை சார்ந்து நாம் செய்ய வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்தப் பயிற்சிக் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே துறையைச் சார்ந்த முதன்மைப் பயிற்றுநர்கள் தங்கள் துறை சார்ந்தவர்களோடு உரையாடுவதற்கு, இந்தப் பயிற்சிக் கையேடு உதவும்.

ஆணைப்போல் பெண்ணுக்கும் இலக்குகள் உண்டு. ஒட்டுமொத்த வளர்ச்சியில் இருவருக்கும் உரிமை உண்டு. இதை சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் உணர வேண்டும். குழந்தைத் திருமண முறையை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்த சமூகமாக, நமது சமூகம் மாற வேண்டும். வளரிளம் பருவத்தினரின் வாழ்வு மேம்பட அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக இருந்து வழிகாட்ட இந்தப் பயிற்சிக் கையேடு உதவியாக இருக்கும்.

வளரிளம் பருவத்தினரின் தன்னுரிமை மேம்பாட்டுக்காகவும் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் மாநில கருவூல மையம் இந்தப் பயிற்சிக் கையேட்டை உருவாக்கியுள்ளது. இந்த முயற்சிக்குத் துணை நிற்கும் தமிழக அரசின் சமூக நலத் துறை மற்றும் யுனிசெஃப் அமைப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறோம். அனைத்துத் தரப்பினரும் இணைந்து செயல்பட்டால்தான் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும். இதற்கான கூட்டுப் பயணத்தைத் தொடங்குவோம்.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | **அமர்வு - 1**<br>அறிமுகம் மற்றும் பயிற்சியின் நெறிமுறைகளை உருவாக்குதல் | 1 |
| 2 | **அமர்வு - 2**<br>பாலினம் சார்ந்த வன்முறையைப் புரிந்துகொள்ளுதல் | 3 |
| 3 | **அமர்வு - 3**<br>குழந்தைத் திருமணம் என்றால் என்ன? இதைப் புரிந்துகொள்வது ஏன் அவசியமாகிறது? | 12 |
| 4 | **அமர்வு - 4**<br>குழந்தைத் திருமணம் - ஒரு மனித உரிமை மீறல் | 15 |
| 5 | **அமர்வு - 5**<br>நான் என்ன செய்ய முடியும் ? | 24 |
| 6 | **இணைப்புகள்** | |
| | **இணைப்பு - 1**<br>சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் | 26 |
| | **இணைப்பு - 2**<br>குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர்/மாவட்ட சமூக நல அலுவலருக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் | 28 |

# அமர்வு 1

# அறிமுகம் மற்றும் பயிற்சியின் நெறிமுறைகளை உருவாக்குதல்

**கற்றலின் நோக்கம் :** பங்கேற்பாளர்களை ஒருவரோடு ஒருவர் அறிமுகப்படுத்துதல்.

பயிலரங்கின்போது கடைபிடிக்க வேண்டிய அடிப்படை விதிகளான பயிற்சியின் நெறிமுறைகள் பற்றி பங்கேற்பாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.

**நேரம் :** இருபது நிமிடங்கள்

**தேவைப்படும் பொருள்கள் :** படவிளக்க அட்டை, வெள்ளைப் பலகை, மார்க்கர்கள்.

**செயல்படுத்தும் விதம்**

**செயல் – 1**

**அறிமுகம்**

பங்கேற்பாளர்களை அறிமுகப்படுத்திக்கொள்ளச் சொல்ல வேண்டும், பெயர், ஊர், பணி விவரம் போன்ற விவரங்களைப் பகிர்ந்து கொள்ளச் சொல்ல வேண்டும்.

**செயல் – 2**

**பயிற்சியின் நெறிமுறைகள்**

பள்ளியில், வகுப்பறையில், சமுதாயத்தில் அல்லது விளையாட்டுக்கென விதிமுறைகள் உள்ளது போல் நம் பயிற்சிக்கான விதிமுறைகளையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்று பங்கேற்பாளர்களுக்கு எடுத்துக்கூறவேண்டும்.

பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கூட்டங்களில் எந்தவிதமான நடத்தைகள், தடைகளை ஏற்படுத்துகின்றன என்று பங்கேற்பாளர்களிடம் கேட்கவேண்டும். பங்கேற்பாளர்கள் கூறும் கருத்துக்களை சார்ட் அட்டையிலோ வெள்ளைப் பலகையிலோ எழுத வேண்டும்.

பின்னர் பங்கேற்பாளர்களிடம், இவ்வாறு பயிற்சிக்குத் தடையாக உள்ள விஷயங்களை நம் பயிற்சியில் மேற்கொள்ளலாமா என்று கேட்டுக் கலந்துரையாட வேண்டும். பயிற்றுநர் குறிப்பில் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் நெறிமுறைகளை வகுத்துக் கொள்ளலாம்.

## பயிற்றுநர் குறிப்பு

**கீழ்க்காணும் அடிப்படை விதிகளை சார்ட் அட்டையில் எழுதி பயிற்சி அறையில் காட்சிப்படுத்தவேண்டும்.**

- பயிற்சியின்போது கைபேசியில் பேசக்கூடாது.
- ஒருவர் பேசும்போது மற்றவர்கள் குறுக்கே பேசக்கூடாது.
- அமர்வுகளுக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்துவிடவேண்டும். பேசுபவரையோ பேசுகின்ற விஷயத்தையோ கேலி செய்யக்கூடாது.
- ரகசியத் தன்மையைக் காப்பாற்றவேண்டும்.
- குழுவுக்குள் பகிர்ந்துகொண்ட விஷயங்கள் குழுவுக்குள்ளேயே இருக்க வேண்டும் .
- ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும்.

## அமர்வு 2

# பாலினம் சார்ந்த வன்முறையைப் புரிந்துகொள்ளுதல்

**கற்றலின் நோக்கம் :** பாலினம் சார்ந்த வன்முறை என்றால் என்ன என்பது பற்றியும் அது பெண்களின் வாழ்க்கையில் எத்தகைய பாதிப்புகளை உருவாக்குகிறது என்பதை பற்றியும் பங்கேற்பாளர்கள் புரிந்துகொள்வார்கள்.

**நேரம் :** 90 நிமிடங்கள்

**தேவைப்படும் பொருள்கள்:** வெள்ளைப் பலகை, மார்க்கர் பேனாக்கள், மாதிரி சம்பவங்களின் பிரதிகள்.

**செயல்படுத்தும் விதம் :**

**செயல் – 1**

**பாலினம் சார்ந்த வன்முறையின் தாக்கங்கள்**

பயிற்றுநர் இந்த அமர்வை தொடங்கும் முன்பு பயிற்றுநர் குறிப்பில் (1) கொடுக்கப்பட்டுள்ள உடற்கூறு பாலினம் என்றால் என்ன, சமூகப் பாலினம் என்றால் என்ன என்று சிறு குறிப்பை படித்து புரிந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்கு அதை விளக்கிக்கூறி அமர்வைத் தொடங்க வேண்டும்.

- மேலும் உடற்கூறு பாலினத்திற்கும் (SEX) சமூகப் பாலினத்திற்கும் (GENDER) உள்ள வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடிய பின் அமர்வை தொடங்கலாம்.

**பயிற்றுநர் குறிப்பு – 1**

ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் உடல் உறுப்புகளின் அடிப்படையில் ஆணா, பெண்ணா என தீர்மானிப்பதுதான் **உடற்கூறு பாலினம் (SEX).** சமூகம் சார்ந்து ஆண் மற்றும் பெண்ணின் குணாம்சங்கள் வரையறுக்கப்படுவதுதான் **சமூகப்பாலினம் (GENDER)** என்கிறோம். (உடற்கூறு பாலினத்திற்கும் சமூக பாலினத்திற்கும் உள்ள வேறுபாடுகள் குறித்து கலந்துரையாடிய பின் அமர்வை நடத்த வேண்டும்). இதை மேலும் எளிதாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் ஒரு பெண்ணால்தான் குழந்தையைப் பெறவும், தாய்ப்பால் கொடுக்கவும் முடியும். இந்த இரண்டு செயல்களை மட்டும் ஆண்களால் செய்ய முடியாது, மற்றபடி ஆண்கள் செய்யக்கூடிய அனைத்து செயல்பாடுகளை பெண்களும், பெண்கள் செய்யக்கூடிய அனைத்து செயல்பாடுகளை ஆண்களும் செய்யமுடியும். ஆனால் அதற்கு சமூக விதிமுறைகள் அனுமதிப்பதில்லை.

ஆண்களும் பெண்களும் அவர்கள் வாழ்கின்ற சமூகம் நிர்ணயித்துள்ள பாலின வரையறைகளின்படியும், சமூக விதிமுறைகளின்படியும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். பெரும்பாலும், ஆண்களும் பெண்களும் அவ்வாறே நடந்தும் கொள்கிறார்கள். ஆனால் இந்த சமுக விதிமுறைகளுக்குள் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே அதிகாரம், வாய்ப்புகள், போன்றவற்றில் வேறுபாடுகள் இருப்பதால் பலவிதமான வன்முறைகள் நிகழ்கின்றன .

ஆண், பெண் என்ற பாலின வரையறைகளில் உள்ள பாகுபாடுகள் காரணமாக ஒரு நபரின் விருப்பத்துக்கு மாறாக அவர்களின் மேல் அதிகாரம் செலுத்துவது, துன்புறுத்துவது போன்றவை பாலினம் சார்ந்த வன்முறை எனப்படுகிறது. பாலின வரையறைகளால் வரக்கூடிய பாதிப்பு ஆண், பெண் இருவரையும் பாதிக்கிறது என்றாலும் அதிகமாக பாதிக்கப்படுவது பெண்கள்தான் என்றும், மனித உரிமை மீறல்களில் பாலினம் சார்ந்த வரையறைகளால் வரக்கூடிய வன்முறைகளுக்கு பெரிய பங்கிருக்கிறது என்று பங்கேற்பாளர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

## செயல் – 2

பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து **பயிற்சித்தாள்1-இல்** கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்களை குழுவுக்கு ஒன்றாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

- ஒவ்வொரு குழுவிலும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்களின் கீழுள்ள கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் வகையில் குழுவில் கலந்துரையாடி ஒரு சார்ட் பேப்பரில் எழுதிக் கொள்ளச் சொல்ல வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் குழுவில் கலந்துரையாடிய கருத்துக்களை பொது அமர்வில் பகிர வேண்டும்.
- பயிற்றுநர், கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி வெள்ளைப் பலகையில் ஐந்து பிரிவுகளாகப் பிரித்து எழுத வேண்டும். பின்னர் ஒவ்வொரு குழுவாக கேள்விகளுக்கான பதில்களை பகிரச் சொல்ல வேண்டும்.
- ஒவ்வொரு குழுவும் பகிர்ந்த பின்பு அந்தச் சம்பவத்தில் என்னென்ன வன்முறைகள் நிகழ்ந்துள்ளன, ஒவ்வொன்றும் எந்த வன்முறையின் கீழ்வரும் என்று கேட்டுக் கலந்துரையாடி வெள்ளைப் பலகையில் குறிக்க வேண்டும்.
- அவ்வாறு பயிற்றுநர் குறிக்கும்போதே பங்கேற்பாளர்கள், எவையெல்லாம் எந்த வன்முறையின் கீழ் வருகிறது என்பதைப் புரிந்துகொள்வார்கள்.

| பாலியல் வன்முறை | உடல் ரீதியான வன்முறை | உணர்வு ரீதியான வன்முறை | பொருளாதார ரீதியான வன்முறை | கலாச்சார பழக்கவழக்கங்கள் |
|---|---|---|---|---|
| பாலியல் பலாத்காரம், பாலியல் துன்புறுத்தல்கள், பாலியல் தாக்குதல்கள். | அடித்தல் அறைதல் உதைத்தல் | மனோரீதியாக மோசமாக உணரச் செய்தல் | நிதி ஆதாரங்கள் மறுக்கப்படுதல், அனைத்து வகை ஆதாரங்களின் (*Resources*) மீது உரிமை மறுக்கப்படுதல். | குழந்தைத் திருமணம், வலுக்கட்டாயமான திருமணம், பெண் கருக்கொலை, சிசுக் கொலை, வரதட்சணை கோருதல் |

## பயிற்றுநர் குறிப்பு

அனைத்து குழுக்களும் பகிர்ந்த பிறகு பங்கேற்பாளர்கள் கூறிய கருத்துக்களை கீழே உள்ளவாறு தொகுத்து வழங்க வேண்டும்.

**பாலினம் சார்ந்த வன்முறையின் தாக்கங்கள் :**

இது பாதிக்கப்பட்டவர்களின் மேல் உடனடியாக தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அவர்களுடைய பாலியல், உடல், மனம் சம்பந்தமான வாழ்விலும் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

**உடல் நலப் பிரச்சினைகள் :**

தேவையில்லாத கர்ப்பம், பாதுகாப்பற்ற கருக்கலைப்பால் வரும் சிக்கல்கள், எச்ஐவி உட்பட பாலியல் தொற்றுகள் அடி உதையால் வரும் காயங்கள் ஆகியவற்றைக் கூறலாம்.

**மனரீதியான, உளவியல் / சமூக ரீதியான பாதிப்புகள் :** மனச்சோர்வு, பதற்றம், மோசமான நிகழ்வுகளால் ஏற்படும் அதிர்ச்சிகரமான மன அழுத்தம், தற்கொலை செய்ய நினைத்தல், மரணம், வன்முறை போன்றவைகள் குழந்தைகளின் உயிர் வாழ்தலையும் வளர்ச்சியையும், படிப்பையும் பாதிக்கிறது.

**சமூகரீதியான பின்விளைவுகள் :** குடும்பங்களுக்கும், அவர்கள் சார்ந்த சமூகத்திற்கும் இந்தப் பாதிப்பு நீள்கிறது. பாலியல் பலாத்காரத்தால் குழந்தை பிறந்தாலோ, அல்லது பாலியல் சார்ந்த வன்முறை நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவரோடு குடும்பம் ஆதரவாக உடன் நின்றாலோ, சமூகம் அவர்களை ஒதுக்குகிறது.

**பொருளாதார வன்முறையின் பின்விளைவுகள் :** பொருளாதார வன்முறையின் பின் விளைவுகளால் பாதிக்கப்பட்டவர் ஒடுக்கப்படுகிறார், இவர் சமூக நிகழ்வுகளில் பங்கெடுக்கத் தயங்கலாம், பொருளாதார ரீதியான வாழ்வில் மிகுந்த பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடலாம் .

**பாலினம் சார்ந்த வன்முறையின் தாக்கங்களைப் பற்றி தொகுத்து கூறிய பிறகு பொது அமர்வாக , பங்கேற்பாளர்களிடம் கீழ்க்காண்பனவற்றைப் பற்றியும் யோசித்துப் பதில் சொல்லச் சொல்லுங்கள்.**

- எல்லாக் கதைகளிலும் அதிகாரம் செலுத்துபவர்கள் யாராக இருக்கிறார்கள்?
- அதிகாரத்திற்கு அடங்கிப் போய் வன்முறையை எதிர்கொள்பவர்கள் யார்?
- வன்முறையை எதிர்கொள்பவர்களுக்கும் வன்முறை செலுத்துபவர்களுக்கும் இடையே உறவு இருக்கிறதா?

- வன்முறை என்பது தெரிந்தவர்களிடம் இருந்து மட்டும்தான் வருகிறதா, தெரியாதவர்களிடமிருந்தும் வருகிறதா?
- நாம் விவாதித்தவற்றில் எவையெல்லாம் கலாச்சார பழக்கவழக்கங்கள், அவற்றிற்கும் வன்முறைக்கும் உள்ள தொடர்புகள் எவை?
- ஏன் பெண்கள், தங்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறையை பொறுத்துப் போகிறார்கள் என்று கேளுங்கள்.

**கலந்துரையாடலில் கீழ்க்காணும் கருத்துக்கள் வரும் வகையில் பயிற்றுநர் விடுபட்ட விஷயங்களைத் தொகுத்துக் கூற வேண்டும்.**

- வீட்டு விஷயத்தை பொதுவில் கொண்டுவந்தால் குடும்ப மானம் போகும் என்பதால் பொறுத்துப்போதல்.
- குடும்பப் பாங்கான பெண் என்றால் இப்படித்தான் மௌனமாக பொறுத்துப் போக வேண்டும் என்ற பிம்பத்தில் சிக்கிக் கொள்ளுதல்.
- வன்முறையை எதிர்த்துக் கேள்வி கேட்டால் குழந்தைகள் பாதிக்கப்படுவார்களோ என்ற பயம்.
- பாதிக்கப்படுபவர்கள், வன்முறையை வன்முறையாக உணராமல் இருப்பது.
- வன்முறைக்கு எதிராக சட்டப்படியாகத் தீர்வு இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பது.
- கணவன் வீட்டை விட்டு வெளியே தள்ளினால் எங்கே போவது என்ற பாதுகாப்பின்மை உணர்வு.
- பொருளாதார ரீதியாக கணவனைச் சார்ந்திருப்பது.
- குடும்ப உறவில் இல்லாவிட்டால் சமூக அந்தஸ்து என்ன ஆகுமோ என்ற பயம்.
- கணவன் வீட்டார் விலக்கி வைத்து விடுவார்களோ என்ற பயம்.

## செயல் – 3

- இப்படிப்பட்ட வன்முறைகளுக்கான வேர் நம்முடைய கலாச்சாரப் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்தான் என்றால் கலாச்சாரத்தோடு வன்முறையைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியுமா என்று பயிற்றுநர், பங்கேற்பாளர்களிடம் கேளுங்கள்.

பயிற்றுநர் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களை **சரியா தவறா** என்று கேட்டு கலந்துரையாட வேண்டும், மேலும் பயிற்றுநர் குறிப்பில் கூறியுள்ள மற்ற கருத்துக்களையும் கூறி பங்கேற்பாளர்களிடம் கூறி இந்த அமர்வையும் முடிக்க வேண்டும்

**பயிற்றுநர் குறிப்பு : சரியா?, தவறா?**

1. குடும்பங்களில் நடக்கும் வன்முறை என்பது அவரவர் குடும்பம் சார்ந்தது, அதில் தலையிட மற்றவருக்கு உரிமை இல்லை.
2. மனைவியைத் திருத்துவதற்காக ஒரு கணவன் அவளை அடிப்பதில் தவறில்லை.
3. மோசமாக உடையணியும் பெண்களிடம் ஆண்கள் மோசமாக நடந்து கொள்வதில் தவறில்லை.
4. ஆண்களால் அவர்கள் பாலியல் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாது.
5. பெண்கள் இயல்பிலேயே மென்மையானவர்கள்.
6. ஆண்கள் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதற்குக் காரணம் அவர்கள் இயல்பு அதுதான்.
7. மதுவும் போதைப் பொருள் பயன்பாடும் ஆண்கள் மோசமாக நடந்து கொள்வதற்கான காரணங்கள்.
8. குடும்ப வன்முறை ஏழை வீடுகளில் மட்டும்தான் நடக்கிறது.
9. குடும்ப மானத்தை அல்லது கௌரவத்தைக் காப்பாற்றவேண்டும் என்றால் பெண் தனக்கு வரும் பிரச்சினைகளைப் பொறுத்துப் போக வேண்டும்.

- பங்கேற்பாளர்கள் பல்வேறு விதமான கருத்துக்களை விவாதிக்கக்கூடும். பாலினம் சார்ந்த வன்முறை நிகழ்வதற்கான காரணங்கள் என்னென்ன என்பது குறித்த கருத்துக்களைக்கூறி பயிற்றுநர் விளக்க வேண்டும்.

**பாலினம் சார்ந்த வன்முறை நிகழ்வதற்கான காரணங்கள் என்னென்ன?**

- சமூகத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற பாலின வரையறைகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு விதமான பாத்திரங்களையும் பொறுப்புகளையும் தருகிறது.
- கலாச்சாரம் மற்றும் சமூக விதிகள் ஆண்களை வலுவானவர்களாக, ஆக்ரோஷமாக இருப்பவர்களாக, மற்றவர்களைக் கட்டுப்படுத்துபவர்களாக, உணர்ச்சிகளை வெளியே காண்பித்துக் கொள்ளாதவர்களாக உருவாக்குகிறது .
- இதேபோல், பெண் என்றால் அடங்கிப் போகிறவர்களாக, பலமற்றவர்களாக, எதற்கும் பொறுத்துப் போகிறவர்களாக, ஆண்களைச் சார்ந்து இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் வரையறுக்கிறது.

- இப்படி ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு விதமாக சமூகமயமாக்குவது இருவருக்கிடையேயும் அதிகாரத்தில், சக்தியில் ஏற்றத் தாழ்வுகளை உருவாக்குகிறது. சிறுவயதில் இருந்தே சுற்றிலுமுள்ள பெரிய ஆண்கள் மற்றும் பெண்களைப் பார்த்து வளரும் பெண் குழந்தைகள் அடங்கிப் போகிறவர்களாகவும், ஆண் குழந்தைகள் அதிகாரம் செலுத்துபவர்களாகவும் வளர்கிறார்கள். வளர்க்கப்படுகிறார்கள்.

- இதன் காரணமாக, பெண்களை மரியாதைக் குறைவாக பார்ப்பதாகவே ஆண்களின் மனோபாவம்இருக்கிறது. தனக்குஅதிகாரம்போய்விடுமோஅல்லதுகுறைந்துவிடுமோ என்று நினைத்து எப்போதும் அதிகாரத்தைச் செலுத்த முற்படுகிறார்கள்.

இந்தப் பயிலரங்கின் நோக்கம் குழந்தைத் திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நாம் அனைவரும் இணைந்து பணியாற்றுவது பற்றியது. குழந்தைத் திருமணம், பாலினப் பாகுபாட்டால் வருவது என்பதை விளக்கவே இந்த அமர்வு. இனி அடுத்த அமர்வில் குழந்தைத் திருமணம் பற்றி மேலும் விரிவாகப் பார்ப்போம் என்று கூறி பயிற்றுநர் முடிக்க வேண்டும்.

## பயிற்சித் தாள் – 1

### சம்பவம் – 1

தீபா, தன்னுடைய மூத்த பெண் குழந்தையுடன் பிரசவத்திற்காக அம்மா வீட்டிற்கு வந்திருந்தாள். இந்த தடவையும் பெண் குழந்தை பிறந்தால் திரும்ப வர வேண்டாம் என்று கணவன் வீட்டார் சொல்லி அனுப்பிவிட்டார்களாம். அப்பாவும் அம்மாவும் ஆண் பிள்ளை தான் பிறக்க வேண்டும் என்று கோயில் கோயிலாகச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். போன முறை கர்ப்பமாக இருந்தபோது வயிற்றில் இருப்பது பெண் குழந்தை என்று தெரிந்து ரகசியமாக ஒரு ஆஸ்பத்திரியில் கருச்சிதைவு செய்தது போல், ஏன் இந்தத் தடவை செய்யவில்லை என்று தீபாவிடம் அம்மா அப்பா கேட்டார்கள்.

தீபாவிற்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையைப் பார்க்க அவள் கணவன் வீட்டார் அனைவரும் வந்திருந்தனர். போகும்பொழுது யாருக்கும் தெரியாமல் அவள் கணவன் சீக்கிரம் வந்துவிடு, நீ இல்லாமல் தனியாக இருக்க முடியவில்லை என்றான்.

தீபாவிற்கு இந்த வார்த்தைகள் மகிழ்ச்சியைத் தருவதற்குப் பதிலாக பயத்தைத் தந்தது. ஆண் குழந்தைக்கு பதிலாக பெண் குழந்தை பிறந்திருந்தால் அம்மா வீட்டிலேயே இருந்திருக்க வேண்டுமோ என்று நினைத்தாள்.

1. கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை கண்டுபிடிப்பது சட்டப்படி சரியா?, தவறா?

2. ஏன் நம் சமூகத்தில் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளையே விரும்புகிறார்கள்?

3. *தீபா ஏன் தன் திருமண வாழ்க்கை பற்றி பெற்றோரிடம் எதுவும் பேசுவதில்லை?*

4. *ஆண் குழந்தை பிறந்திருந்தாலும் கூட, ஏன் தீபாவிற்கு அவள் கணவன் வீட்டிற்கு திரும்பிப் போவது வருத்தமாக இருக்கிறது?*

### சம்பவம் - 2

*டியூஷன் வகுப்பை விட்டு அனைவரும் கிளம்பிவிட்டனர். சீதாவை, திருத்திய பேப்பர்களின் மதிப்பெண்களைக் கூட்டிப் போடச் சொன்னார் டியூஷன் சார். சீதா மார்க்கை சொல்லச் சொல்ல சார் நோட்டில் குறித்துக் கொண்டே வந்தார். பாதியில் காதில் சரியாக விழவில்லை என்று அவளுக்கு வெகுஅருகில் வந்து உட்கார்ந்தார். சீதா அவள் உட்கார்ந்திருந்த இடத்தில், தன்னை வெகுவாக குறுக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். அவள் கிளம்பும்பொழுது இருட்டிவிட்டிருந்தது. வேகமாக நடந்தாள். சைக்கிளில் யாரோ அவள்மேல் இடித்து விட்டுப் போனார்கள். ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். தனக்கு நேர்ந்ததை அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். அம்மாவும் அப்பாவும் கோபமாக சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். மௌனமாக அறையின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தாள்.*

*விளையாடிவிட்டு உள்ளே வரும்போதே, "அம்மா, அம்மா" என்று கூப்பிட்டு கொண்டே வந்தான் அவள் அண்ணன் கார்த்தி. அம்மா சுருண்டு கிடந்தாள், அப்பா வெளியே போய்விட்டிருந்தார்.*

*"எனக்கு பசிக்குது சாப்பாடு கொடு," என்று சீதாவைப் பார்த்து கேட்டான் கார்த்தி. இந்தக் கணக்கை முடித்துவிட்டு வருகிறேன் என்று சீதா முடிப்பதற்கு முன்பாக அவள் கையிலிருந்த நோட்டைப் பிடுங்கி எறிந்தான். சனியனே, சோறு போடு, படிச்சு என்ன கிழிக்கப்போற என்றான். சீதாவிற்கு அவள் அப்பாவைப் பார்ப்பது போலிருந்தது. அவள் எழுந்து போனாள்.*

1. *இந்தக் கதையில் சீதா எந்தவிதமான வன்முறைகளை எதிர்கொள்கிறாள்?*

2. *சீதாவின் அம்மா எந்தவிதமான வன்முறைகளை எதிர்கொள்கிறாள்?*

3. *இது ஆண் பெண் இருவருக்கும் நடக்கக்கூடிய வன்முறையா அல்லது சீதாவும் அவள் அம்மாவும் பெண் என்பதால் அவர்களுக்குப் பாலினம் சார்ந்து வருகின்ற வன்முறையா?*

4. *சீதாவின் அண்ணன் அவளிடம் ஏன் கோபமாகப் பேசுகிறான்? சீதாவின் மீதான தன் அதிகாரத்தை எப்படி வெளிப்படுத்துகிறான்?*

5. *சீதாவின் அப்பா, ஏன் சீதாவின் அம்மாவை அடிக்கிறார்? இது சீதாவிற்கும் கார்த்திக்கும் எந்தவிதமான பாடத்தை கற்றுக் கொடுக்கிறது?*

## சம்பவம் - 3

*கல்யாணம் செய்து கொடுத்த இந்த இரண்டு வருடங்களில் கல்யாணத்தின்போது கொடுத்த வரதட்சணை சீர் போக, ஷீலாவின் கணவன் வீட்டார் அவளை திரும்பத் திரும்பப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி, புது டிவி, பிரிட்ஜ் என எதையாவது வாங்கி வரச் சொன்னார்கள். ஆனால் இந்தத் தடவை அவள் வந்த விஷயம் வேறு. ஷீலாவின் கணவன் வீட்டில் தூரத்து சொந்தக்காரர்கள் அவர்கள் பையனுக்கு பெண் பார்க்கிறார்களாம், அவர்களுக்கு ஷீலாவின் தங்கை ஜோதியை ரொம்ப பிடித்துவிட்டதாம்.*

*ஜோதிக்கு கல்யாணமா, உன் கல்யாணக் கடனே முடியவில்லை, அதுவுமில்லாமல் ஜோதிக்கு பதினேழு வயது தானே ஆகிறது என்றார் அப்பா.*

*அப்பா நீங்க இந்த கல்யாணத்துக்கு ஒத்துக்கலைன்னா, என்னுடைய வாழ்க்கை சிக்கலாகிவிடும் என்றாள் ஷீலா.*

*ஒரு விவரமும் தெரியாம எப்படிம்மா என்று இழுத்தாள் அம்மா. என்ன விவரம் நல்ல சொத்துக்காரங்க. பையனுக்கு வயசு இருபத்து எட்டு. சொந்த வீடு, கார் எல்லாம் இருக்கு என்றாள் ஷீலா. ஜோதி கடுமையாக எதிர்த்தாள். மேலே படிக்க வேண்டும் என்றாள். ஷீலா பிடிவாதம் பிடித்து கல்யாணத்தை முடித்தாள். முதலிரவில் முரட்டுத்தனமாக நடந்து கொண்ட கணவனைப் பார்த்து ஜோதிக்கு பயமாக இருந்தது .*

*அப்பாவும் அம்மாவும் ஷீலா மாதிரி அடிக்கடி பிறந்த வீட்டிற்கு வரக்கூடாது என்று ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டார்கள் . ஒரு வருடத்தில் ஜோதியின் கணவன் ஒரு கார் விபத்தில் இறந்து விட்டான். ஜோதி வந்த நேரம்தான் இப்படியாயிற்று என்று அவள் புகுந்த வீட்டார் அவளை பிறந்த வீட்டிற்குத் துரத்தி விட்டனர். அப்பா அம்மாவை தொல்லைப்படுத்த வேண்டாம் என்பதற்காக ஒரு கம்பெனியில் வேலை கேட்டதற்கு பிளஸ் டூ ஆவது படித்து முடித்திருக்க வேண்டும் என்றார்கள்.*

1. *ஏன் ஷீலாவின் வீட்டாரிடம் புகுந்த வீட்டார் திரும்பத் திரும்ப வரதட்சணை கேட்கிறார்கள்?*

2. *ஜோதியின் திருமணத்திற்குக் காரணம் யார், யார்?*

3. *ஏன் ஜோதியின் பெற்றோர் இந்தத் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டார்கள்? இந்தத் திருமணத்திற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளாவிட்டால் என்ன நடந்திருக்கும்?*

4. *இந்தத் திருமணத்தால் ஜோதி எந்த விதமான வன்முறைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது? எந்தவிதமான வாய்ப்புகளை இழக்கிறாள்?*

## சம்பவம் - 4

வழக்கம்போல் குடித்துவிட்டு வந்த கணவனைப் பார்த்து காமாட்சி நொந்துபோனாள், கையில் ஒரு காசும் இல்லை. முன்பாவது கூலி வேலைக்குப் போய் ஏதோ அரை வயிற்றுக் கஞ்சிக்காவது சம்பாதிக்க முடிந்தது. ஓயாமல் வேலைப் பார்த்ததில் தீராத முதுகுவலி. அதனால் வேலைக்கும் போக முடியவில்லை. கணவனிடம் காசு கேட்டாள். எப்பப்பாரு காசு, காசுன்னு... சனியனே செத்துத் தொலை என்று திட்டினான்.

வேறு வழி தெரியாததால் பதினைந்து வயது முத்தம்மாவை படிப்பை நிறுத்திவிட்டு மில் வேலைக்கு அனுப்பினாள். ஆனால் ஏதோ அதிகாரிகள் வந்தார்களாம். சின்னப் பொண்ணு வேலைக்கு வரக்கூடாது என்று சொல்லிவிட்டார்களாம் .

எப்படியாவது சுந்தர் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டால் கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடும் என்று நினைத்தாள். கல்லூரிக் கட்டணம் கட்டக் கூட வழியில்லாத நிலையில், சுந்தர் படிப்பை நிறுத்திவிட்டு ஒரு கடையில் வேலைக்கு போனான்.

1. காமாட்சி எந்த மாதிரியான வன்முறைகளை எதிர்கொள்கிறாள்?
2. முத்தம்மாவால் ஏன் வேலையைத் தொடர முடியவில்லை? இது குறித்த சட்டங்கள் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?
3. சுந்தர் மீதும் பாலினம் சார்ந்த வன்முறை நிகழ்கிறது என்று நினைக்கிறீர்களா?
4. ஏன் காமாட்சியின் கணவனுக்கு தன் குடும்பத்தைப் பராமரிக்காதது பற்றி குற்றவுணர்ச்சி இல்லை?
5. காமாட்சியின் உடல் சார்ந்த, மனம் சார்ந்த பிரச்சினைகள் என்னென்ன ?

# அமர்வு 3

# குழந்தைத் திருமணம் என்றால் என்ன? இதை புரிந்து கொள்வது ஏன் அவசியமாகிறது?

**கற்றலின் நோக்கம் :** இந்த அமர்வின் முடிவில் பங்கேற்பாளர்கள் தங்கள் சமூகத்தில் குழந்தைத் திருமணத்தின் தற்போதைய நிலை என்ன என்று தெரிந்து கொள்வார்கள். அதை நிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் புரிந்து கொள்வார்கள்.

**நேரம் :** 60 நிமிடங்கள்

**தேவைப்படும் பொருள்கள் :** குழந்தைத் திருமணம் ஏன்? எதற்கு? எப்படி? என்ற புத்தகத்தின் பிரதிகள்

**செயல்படுத்தும் விதம் :**

- பங்கேற்பாளர்களுக்கு குழுவுக்கு ஒன்று வீதம் குழந்தைத் திருமணம் ஏன்? எதற்கு ? எப்படி? என்ற புத்தகத்தைக் கொடுத்து குழுவில் வாசிக்கச் சொல்ல வேண்டும் .

- பின்னர் குழுவில் கலந்துரையாடிய பின் பொது அமர்வில் பயிற்றுநர் விளக்கிக் கூற வேண்டும். குழந்தைத் திருமணத்தின் தற்போதைய நிலை பற்றியும் அது தற்போது எவ்வாறு பரவலாக நடைபெறுகிறது என்பது பற்றியும் கேள்விகள் கேட்டு கலந்துரையாட வேண்டும் .

- பங்கேற்பாளர்களுக்கு தெரிந்த ஏதேனும் சம்பவங்கள் இருந்தால் அதைப் பற்றி கலந்துரையாடி விளக்க வேண்டும்.

- தற்போதுள்ள சட்டங்களுக்கு கட்டுப்பட்டு என்ன செய்ய முடியும் என்பது பற்றியும் பங்கேற்பாளர்களுடன் விவாதிக்கவேண்டும். குழந்தைத் திருமணம் தொடர்பான சம்பவங்களைப் பற்றி யாரிடம் தகவல் சொல்ல வேண்டும் என்பது பற்றி கலந்துரையாட வேண்டும் .

- மேலும் குழந்தைத் திருமணம் தொடர்பான சட்டங்கள் பற்றியும் அது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கும் பொறுப்புகள் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரிகள் பற்றியும் கலந்துரையாட வேண்டும்.

## பயிற்றுநர் குறிப்பு

***கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்டு கலந்துரையாடலை எடுத்துச் செல்ல வேண்டும்:***

*1. வளரிளம் பருவத்தில் உள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும் பெற்றோர்கள் திருமணம் செய்து வைப்பதற்கான காரணங்கள் என்ன?*

*2. குழந்தைத் திருமணம் எவ்வாறு வளரிளம் பருவ ஆண்களையும், பெண்களையும் பாதிக்கிறது?*

*3. குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதும், நிறுத்துவதும் ஏன் அவசியமாகிறது?*

*4. குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்த என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?*

***குழந்தைத் திருமணம் குறித்த நம் சமூக விதிகள் பற்றியும் பங்கேற்பாளர்களோடு கீழ்க்கண்பனவாறு கலந்துரையாட வேண்டும்:***

- *இந்திய சமுதாயத்தில் குடும்பம் என்பதுதான் அடிப்படைக் கட்டமைப்பாக உள்ளது. திருமணம் என்பது ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமான வாழ்க்கை என்று பார்க்கப்படுவதைவிட குடும்பம் என்ற கட்டமைப்பு தொடரப்பட வேண்டியதாகவே பார்க்கப்படுகிறது. பெண் குழந்தை பிறந்ததிலிருந்தே, "வளர்த்து ஒருத்தன் கையில் கொடுக்கணும், இன்னொருத்தர் வீட்டுக்குப் போக வேண்டிய பொண்ணு," என்றுதான் பார்க்கிறார்கள்.*

- *ஆணுக்குக் கல்வியும் வேலைவாய்ப்பும் முக்கியமானதாகக் கருதப்படுவது போல் பெண்ணுக்குக் கருதப்படுவதில்லை.*

- *பெண்களுக்கு வயது கொஞ்சம் அதிகமாகிவிட்டால் அதிக வரதட்சணை கொடுக்க வேண்டியிருக்கும். ஏனெனில் பொதுவாக மாப்பிள்ளை வீட்டார் இளவயதுப் பெண்களையே திருமணம் செய்ய நினைக்கிறார்கள். நல்ல பையன் கிடைத்தால் போதும். பையனுக்கு அதிக வயதாகி இருந்தாலும், பெண்ணுக்கு குறைந்த வயதாக இருந்தாலும் திருமணம் செய்துவிடலாம்.*

- *பெண்கள் கொஞ்சம் பெரியவர்களாகி விவரம் தெரிந்து வெளியில் நடமாடவும் ஆரம்பித்துவிட்டால் காதல், பாலியல் உறவு போன்ற பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளக்கூடும். எனவே, பெண் குழந்தைகளின் கன்னித் தன்மையைக் காப்பாற்றுவதற்காக, விவரம் தெரிவதற்கு முன்பே அவர்களுக்குத் திருமணம் செய்துவிடலாம்.*

- இதுபோன்ற வேறு என்னென்ன சமூக விதிகள் குழந்தைத் திருமணத்தை ஒட்டி வருகிறது என்று பங்கேற்பாளர்களிடம் கேட்டுக் கலந்துரையாட வேண்டும். இந்த சமூக விதிகள் பெண் குழந்தைகளின் வாழ்க்கையில் எவ்வாறெல்லாம் மனித உரிமை மீறல்களாக இருக்கின்றன என்பதை இனி வரும் அமர்வுகளில் பார்க்கலாம் என்று கூறி அமர்வை முடிக்க வேண்டும்.
- இந்த அமர்வைத் தொடங்குவதற்கு முன்பே பயிற்றுநர், குழந்தைத் திருமணம் ஏன், எதற்கு, எப்படி என்ற புத்தகத்தில் உள்ள கருத்துக்க்களைப் படித்து புரிந்து கொண்டு அமர்வினை நடத்திச் செல்ல வேண்டும் .

# அமர்வு 4

# குழந்தைத் திருமணம் – ஒரு மனித உரிமை மீறல்

**கற்றலின் நோக்கம் :** இந்த அமர்வின் முடிவில்,

- மனித உரிமைகள் மீறல் பார்வையிலிருந்து குழந்தைத் திருமணம் எப்படி ஒரு மனித உரிமை மீறல் என்பதை இன்னும் நன்றாகப் புரிந்துகொள்வார்கள்.
- வளரிளம் பருவ பெண்ணின் வாழ்வில் குழந்தைத் திருமணத்தால் வரக்கூடிய பாதிப்பைப் பற்றி அதிகம் அறிந்து, அது பற்றி நன்கு உணர்ந்தவர்களாக ஆவார்கள்.

**நேரம் :** 90 நிமிடங்கள்

**தேவைப்படும் பொருள்கள் :** சார்ட் பேப்பர், மார்க்கர் பேனாக்கள்

**செயல்படுத்தும் விதம் :** பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாகப் பிரிக்க வேண்டும் .

- **பயிற்சித்தாள் -1** இல் கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்களை ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்று வீதம் கொடுக்க வேண்டும் .
- குழுவில் உள்ள அனைவரும் கலந்துரையாடலில் தங்கள் கருத்துக்களை பகிர வேண்டும். சம்பவங்களைப் பற்றி கலந்துரையாடிய பிறகு அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களை தயார் செய்ய வேண்டும்.
- குழுவில் 30 நிமிடங்களுக்கு கலந்தாய்வு செய்த பிறகு, பதில்களை ஒரு சார்ட் பேப்பரில் எழுதச் சொல்ல வேண்டும் .
- பிறகு பொது அமர்வில் தங்களுக்கு கொடுக்கப்பட்ட சம்பவத்தைக்கூறி அதில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை மற்றவர்களுடன் பகிரச் சொல்ல வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட பிறகு பொது அமர்வில், **பயிற்சித்தாள்-2ல்** உள்ள ஆறு கேள்விகளையும் கேட்டு விவாதிக்க வேண்டும்.

♦ உடல்நலம், வேலை, குடும்ப வன்முறை, கல்வி, தேர்ந்தெடுப்பதற்கான உரிமை போன்றவை விவாதிக்கப்படும் போது தனி நபரின் மனித உரிமை மீறல் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று பங்கேற்பாளர்களிடம் கூறவேண்டும்.

**கீழ்க்ககாணும் அட்டவணையில் உள்ள கருத்துக்கள் அனைத்தும் வருவதை பயிற்றுநர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.**

| கல்வி மற்றும் குழந்தைத் திருமணமும் | உடல்நலம் மற்றும் குழந்தைத் திருமணம் |
|---|---|
| மீறப்படும் உரிமைகள் | மீறப்படும் உரிமைகள் |
| 1. கல்விக்கான உரிமை<br>2. வேலை பெறுவதற்கான உரிமை<br>3. இனப்பெருக்கம் மற்றும் பாலியல் உடல்நலத்திற்கான உரிமை<br>4. தேர்ந்தெடுக்கும் உரிமை | 1. கல்விக்கான உரிமை<br>2. துணைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உரிமை<br>3. இனப்பெருக்க உரிமை<br>4. சுரண்டல்களுக்கு எதிரான உரிமை<br>5. உடல்நலம் மற்றும் சிகிச்சைக்கான உரிமை<br>6. பொருளாதார பாதுகாப்பிற்கான உரிமை<br>7. வெளியில் வேலை பார்த்து சம்பாதிப்பதற்கான உரிமை |
| தாக்கம் | தாக்கம் |
| 1. கல்வியில் இடையூறு.மோசமான பொருளாதார நிலைமை<br>2. குழந்தைகளை வளர்ப்பதில் குடும்பத்தை கவனிப்பதில் கஷ்டங்கள்<br>3. பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாதல்<br>4. தாய் மேல் நிகழும் குடும்ப வன்முறை மகள்களையும் பாதித்தல்<br>5. கல்வியை முழுமையாக முடிக்காததால், குறைவான வாய்ப்புகள்<br>6. எல்லா விதமான உரிமைகளையும் இழந்து, எந்தவித உதவிகளும் கிடைக்காமலேயே தொடர்ந்து வாழ்தல். | 1. இளவயது தாய்மையும் அதனைத் தொடர்ந்து வரும் பாதிப்புகளும் தாய்க்கு உண்டாகின்றன.<br>2. குறைவான எடையுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு உடல் நல பாதிப்புகளும் ஏற்படுகின்றன.<br>3. கணவரிடமிருந்து வந்த எச்.ஐ.வி. தொற்றால் மோசமாகும் உடல்நலம், இதற்காக பெண் மீதே குற்றம்சாட்டப்படுதல்.<br>4. பெண்கள் மற்றும் இளவயது பெண்களுக்கு எந்த விதமான பொருளாதார ரீதியான வளங்களும் கிடைப்பதில்லை.<br>5. புகுந்த வீட்டிலிருந்து வெளியே தள்ளப்படுதல். பிறந்த வீட்டிலும் ஏற்றுக் கொள்ளாத பொழுது, வீடற்றவர்கள் ஆதல். |

| குடும்ப வன்முறை மற்றும் குழந்தைத் திருமணம் | தேர்ந்தெடுத்தல் மற்றும் குழந்தைத் திருமணமும் |
|---|---|
| மீறப்படும் உரிமைகள் | மீறப்படும் உரிமைகள் |
| 1. கல்விக்கான உரிமை<br>2. மகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான உரிமை<br>3. இனப்பெருக்கம் மற்றும் பாலியல் உடல்நலத்திற்கான உரிமை மீறல்<br>4. வரதட்சணை கேட்கப்படுவதற்கு எதிராக செயல்படும் உரிமை | 1. கல்விக்கான உரிமை<br>2. குழந்தைகளுக்கு கல்விக்கான உரிமை பற்றி சொல்வதற்கான உரிமை<br>3. முன்பின் அறிமுகமில்லாதவருக்கு இளவயது பெண்ணைத் திருமணம் செய்யும்போது அதுபற்றி முடிவெடுப்பதற்கான உரிமை. |
| தாக்கம் | தாக்கம் |
| 1. உடல், மனம், ஆன்ம வளர்ச்சி மறுக்கப்படுதல்<br>2. பாலியல் ரீதியாக சுரண்டப்படுதல். பாலுறவு வைத்துக் கொள்வது பற்றி தம்பதிகளிடம் ஒருமித்த கருத்து வராதபோது, அதை 'திருமணத்திற்குள் நடக்கும் பாலியல் பலாத்காரம்' என்கிறோம். | 1. படிப்பில் இடையூறு<br>2. எந்த திறன்களும் கிடைக்கப்பெறாதிருத்தல்<br>3. வளங்களைப் பெறுவதில் குறைந்த அளவே வாய்ப்பு<br>4. மோசமாக நடத்தப்படுவது பற்றிய அச்சம்<br>5. தன் உடல் மீதே உரிமை இல்லாமல் இருப்பது. இனப்பெருக்கம் பற்றியும் உரிமை இல்லை.<br>6. பாலின பேதத்தால் வரக்கூடிய வறுமை மற்றும் சமத்துவமின்மையால் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்கள் |

**அட்டவணையில் எழுதப்பட்ட கருத்துக்களை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி கீழ்க்காண்பனவாறு விளக்க வேண்டும்.**

- மனித உரிமைகள் பற்றி நாம் புரிந்துகொள்ள முயற்சி செய்தோம். உதாரணத்திற்கு, வளரிளம் பருவப் பெண்களைப் படிக்க அனுமதிக்காவிட்டால் அல்லது படிப்பை பாதியில் நிறுத்தினால் அவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகள் கிடைக்காது.
- பெண்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு இல்லாத நிலையில், அவர்கள் பொருளாதார தேவைகளுக்காகக் கணவரைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

- *அவர்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும்போது பொருளாதாரத் தேவைகளுக்காக துணைவரை சார்ந்திருப்பது, வீட்டைவிட்டு வெளியேற முடியாமல், எது பற்றியும் முடிவெடுக்க முடியாத சூழலுக்குத் தள்ளும்...என்பது குறித்து விவாதத்தை நடத்திச் செல்லவேண்டும்.*

- *இதேபோல் கர்ப்பத்தடை அல்லது குடும்பத்தைத் திட்டமிடுவது பற்றிய தகவல்கள் சரிவர தெரியாத நிலையில், வேண்டாத கர்ப்பத்தை சுமக்க நேர்வதோடு, இதுபற்றியெல்லாம் தெரியாத நிலையில், இளம் வயதில் குழந்தையைப் பெற்றெடுக்க நேரிடலாம். இது இளம் பெண்களின் உடல் நலத்தையும் வாழ்க்கையையும் மோசமாக பாதிக்கிறது என்று சொல்ல வேண்டும்.*

**மேற்குறிப்பிட்ட விஷயங்கள் பற்றி பேசுவது அர்த்தமுள்ளதாகவும், சுவாரஸ்யமானதாகவும் இருந்தாலும்கூட, நம் விவாதத்தில் கீழ்க்கண்ட விஷயங்களையும் கண்டிப்பாக சேர்த்துக்கொள்ள வேண்டும்.**

- *குழந்தை / சிறுவயது திருமணத்தால், மனித உரிமைகள் மீறப்படுகின்றன.*

- *குழந்தைத் திருமணத்தால், பெண்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. பெண்களின் கல்வி தடைப்படுகிறது.*

- *இது ஒரு மாபெரும் மனித உரிமை மீறலாகும். மனித உரிமை பிரகடனத்தின் 26வது விதி இதுபற்றி கூறுகிறது.*

- *இளவயது திருமணத்தால் பெண்களின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. இது மனித உரிமை பிரகடனத்தின் 25வது விதியில் அடிப்படை உரிமையாகக் கூறப்பட்டுள்ளது.*

- *வேலைவாய்ப்பிற்கான உரிமை மற்றும் மீறல் பற்றி மனித உரிமை பிரகடனத்தின் 23வது விதி கூறுகிறது.*

- *சமூகப் பாதுகாப்பு உரிமை மற்றும் மீறல் பற்றி மனித உரிமை பிரகடனத்தின் 22வது விதி விளக்குகிறது.*

- *திருமணம் செய்வதற்கு முழுமையான சம்மதம் மற்றும் சுதந்திரம் பற்றியும் அதை மீறுதல் பற்றியும் மனித உரிமை பிரகடனத்தின் 16வது விதி பேசுகிறது. ஏனென்றால் வளரிளம் பருவ ஆண்களும் / பெண்களும் முதிர்ச்சி இல்லாதவர்களாக அவர்களின் முடிவுகளின் பின் விளைவுகள் பற்றி அறியாதவர்களாக இருப்பார்கள்.*

- *மனித உரிமைகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இளவயது / குழந்தைத் திருமணம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறுவதோடு பிற மனித உரிமைகளையும் மீறுகிறது.*

சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை 1943ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே இந்திய குடிமக்களாக உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து உரிமைகளும் நமக்கும் உண்டு.

**மேற்குறிப்பிட்ட கருத்துக்களைப் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாடிய பிறகு தற்போதைய நிலை மாற வேண்டுமென்றால் கீழ்க்காணும் விஷயங்கள் பற்றி நாம் தொடர்ந்து யோசிக்க வேண்டுமென்று கூறி அமர்வை முடிக்க வேண்டும்.**

- பெற்றோர்கள் பெண் குழந்தைகளை இரண்டாம் பட்சமாக நடத்துவதால் பெண் குழந்தைகள் எப்படித் தொடர்ந்து துயரப்படுகிறார்கள் என்பதை விளக்குங்கள்.
- மொபைல் போன் தொழில்நுட்பம் வளரிளம் பெண்களை எப்படி வீட்டைவிட்டு ஓடிப்போவது மாதிரியான செயல்களை செய்யத் தூண்டுகிறது என்று பேசுவது சரியா என்று கேட்டு கலந்துரையாட வேண்டும்.
- தொழில்நுட்பத்தில் பிரச்சினைகள் ஏதும் இல்லை. அதை எவ்வாறு பொறுப்பாகக் கையாள்வது என்று வளரிளம் பருவத்தினருக்கு தெரியாதிருப்பதுதான் ஒரு பிரச்சினையாக உள்ளது என்று கூறி கலந்துரையாட வேண்டும்.
- தங்கள் குடும்பத்துப் பெண்களை ஒரு பாரமாக கருதும் மனோபாவத்தையும், எண்ணத்தையும் மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பங்கேற்பாளர்களுடன் கலந்துரையாட வேண்டும் .
- பெண் குழந்தைகளை வளர்க்கும்போது, ஆரோக்கியமான, அறிவு பெற்ற, தன்னுரிமை மேம்பாடு அடைந்தவர்களாக வளர்த்தால், அவர்கள் பெற்றோர்களை நன்கு பார்த்துக்கொள்வார்கள். அவர்களால் ஆரோக்கியமான உறவுகளை கட்டமைக்க முடியும். இதனால் பெண்களால் கௌரவமாக வாழ முடியும். குடும்ப வன்முறையை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளாத மனோபாவத்தோடு நாம் நியாயமாகச் செயல்படும் நிலையில் இருந்தால் மட்டுமே இது நிகழும் என்று கூற வேண்டும்.
- சிறு வயதில் பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்யும்போது, அவளுடைய மௌனம் சம்மதத்திற்கான விஷயமாக கருதப்படுகிறது. இது பற்றியும் நாம் பேச வேண்டும் என்று கூறுங்கள்.
- பெண்கள் பாலியல் பலாத்காரம் மற்றும் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாகாமல் தடுப்பதற்கு திருமணம் ஒன்றே மாற்று என்று நினைக்கிறோம். இந்த மனோபாவத்தை மாற்றிக் கொள்ள வேண்டி இருக்கிறது. திருமணத்தில் பாலியல் வன்முறை பற்றி நடைமுறையில் சட்டம் எதுவும் இல்லாவிட்டாலும் எல்லா திருமணங்களிலும் பாலியல் வன்முறை இருக்கிறது. அதிலும் இளவயதுத் திருமணம் அல்லது குழந்தைத் திருமணத்தில் பாலியல் வன்முறை அதிகமாக உள்ளது.

♦ பெண்களாகப் பிறந்ததாலேயே பாதிக்கப்படுகிற மாதிரி உள்ள சூழல் இல்லாத ஒரு நிலையை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும் என்று கூறி கலந்துரையாட வேண்டும். பங்கேற்பாளர்கள் அனைவரும் கலந்துரையாடலில் கலந்து கொள்வதை ஊக்குவிக்க வேண்டும் .

**பயிற்சித்தாள் - 1**

**சம்பவம் – 1**

*15 வயதுடைய மீனா ஒரு கிராமத்தில் வாழ்கிறாள். அவள் ஒன்பதாம் வகுப்பில் படிக்கிறாள். ஒரு நாள் அவளுடைய அண்டை வீட்டார், மீனாவை தங்களுடைய அக்கா பையனுக்கு திருமணம் செய்வதற்காக, மீனாவின் அப்பாவை அணுகினார்கள். அவர்கள் அக்கா பையன் சத்தீஸ்கரில், ஒரு செங்கல் சூளையில் வேலை செய்துகொண்டிருந்தான். மீனாவிற்கு திருமணத்தில் விருப்பமே இல்லை. ஆனால் அவள் தந்தையோ, பெற்ற கடமையை முடிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று நினைத்தார். இறுதியில் ஒரே மாதத்தில் அவளுடைய திருமணத்தை நடத்தி முடித்துவிட்டார்.*

*ஒரு வருடத்திற்கு பின், அவளுக்கு 16 வயது இருக்கும்போது மீனா ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கர்ப்பக் காலத்தில் அவளுக்கு சத்தான உணவோ உடல்நல பராமரிப்போ கிடைக்கவில்லை. முக்கால்வாசி நேரம், அவளுடைய கணவன் வேலைக்காக வெளியே சென்றிருந்தான். கணவன் வீட்டிற்கு அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருந்தாலும், அவளுக்கு ஒழுங்காகப் பணம் அனுப்பவில்லை. அவளுக்குப் பிரசவம் மிகவும் கடினமாக இருந்தது. மிகவும் பலவீனமாகவும் அடிக்கடி உடல்நலம் சரியில்லாமலும் இருந்தாள். ஆயினும் எடை குறைவாகவும், ஊட்டச்சத்து குறைபாடுடனும் குழந்தை பிறந்தது.*

*சில மாதங்களுக்குள்ளாகவே மீனாவிற்கு அடிக்கடி காய்ச்சல் வந்தது. உடலில் தடிப்புகளும், அடிக்கடி சோர்வும் ஏற்பட்டன. கழுத்தைச் சுற்றி வீக்கமும் ஏற்பட்டது. ஒரு மருத்துவரை அணுகியபோது அவர் இரத்தப்பரிசோதனைக்குப் பரிந்துரைத்தார். அந்த பரிசோதனையில் அவளுக்கு எச்.ஐ.வி தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.*

*அவளுடைய புகுந்த வீட்டாருக்கு இது தெரிந்த பின் அவளுடைய நோய்க்கு அவளுடைய நடத்தையே காரணம் என்று குற்றம்சாட்டி குழந்தையுடன் அவளை விரட்டிவிட்டனர். இப்பொழுது அந்தக் குழந்தையும் அடிக்கடி உடல் நலமின்றி இருந்தது. அவள் அவளுடைய பெற்றோர்களிடம் சென்றபோது அவர்களும் அவளைத் திருப்பி அனுப்பிவிட்டனர்.*

**உங்கள் குழுவில் கீழ்க்காண்பனவற்றை கலந்தாய்வு செய்ய வேண்டும்.**

1. *இந்தக் கதையில் என்னென்ன உரிமைகள் மீறப்பட்டன? எவ்வாறு?*
2. *இந்த உரிமை மீறலினால் அந்த பெண் பிள்ளைக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?*

**சம்பவம் – 2**

*ரமா ஒரு நகரத்தின் அருகில் உள்ள ஒரு கிராமத்தில் வசித்து வந்தாள். ஒவ்வொரு வருடமும் அவள் பள்ளியில் நன்றாகவே படித்தாள். அவள் ஒன்பதாம் வகுப்பிற்குச் சென்றபின் அவளுடைய தந்தை அவளுடைய தாயின் விருப்பத்திற்கு மாறாக ரமாவிற்கு ஒரு அலைபேசியை வாங்கிக் கொடுத்தார். ரமா அலைபேசியை உபயோகித்து ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் உள்ள தன் நண்பர்களுடன் அரட்டை அடிக்கத் தொடங்கினாள். அவள் தன் நண்பர்களுடன் சுதந்திரமாக இருப்பது அவளது தந்தைக்குப் பிடிக்காமல் போக ஆரம்பித்தது.*

*ஒரு நாள், அவள் தன் பெற்றோர் அவளுக்காக வரன் தேடுவதை அறிந்தாள். அவளுடைய பெற்றோரிடம் அவள் திருமணம் செய்து கொள்வதற்குப் பதிலாக படிப்பைத் தொடர விரும்புவதாகக் கூறினாள். ஆனால் அவள் வேறு ஜாதிப் பையனுடன் நட்பில் இருப்பதாக அவளுடைய தந்தை நினைத்தார். அதனால், அவர் தேர்ந்தெடுத்த பையனைத்தான் ரமா திருமணம் செய்துகொள்ளவேண்டுமென, அவள் "நலத்தை விரும்பும் தந்தையாக" நிர்பந்தித்தார்.*

*அடுத்த நாள், பள்ளிக்குச் செல்லும் வழியில் அவளுடைய நண்பனான குமாரைச் சந்தித்து வீட்டில் நடந்து கொண்டிருப்பதைப் பற்றிக் கூறினாள். ரமாவும், குமாரும் அன்று பள்ளிக்குச் செல்லாமல் அருகிலுள்ள பூங்காவிற்கு ஒன்றாகச் சென்று அவளுடைய பிரச்சினைகளுக்கானத் தீர்வு குறித்துப் பேசினர். திரும்பும் வழியில் ரமாவின் தந்தை அவர்களைப் பார்த்து விட்டார். ரமாவை குமாருடன் பார்த்தவுடன் அவர் மிகவும் கோபப்பட்டார்.*

*ரமா அன்று வீடு திரும்பவில்லை. ரமாவின் தந்தை உள்ளூர் காவல் நிலையத்தில் தப்பான குற்றச்சாட்டு என்று தெரிந்தும் தன் பெண் கடத்தப்பட்டாள் என்று புகார் செய்தார். பின்னர் ரமா அவளுடைய தோழன் குமாரை திருமணம் செய்துகொண்டு அவனுடைய பெற்றோரின் ஒப்புதலுடன் அவர்களுடைய வீட்டில் வாழ்வதாகக் கேள்விப்பட்டார். கோபத்தில் அவர், அவருடைய ஊரிலுள்ள சில அதிகாரம் படைத்த நபர்களுடன் ரமாவைச் சந்தித்தார். குமாரையும் அடித்துவிட்டார். ரமாவைத் தன்னோடு வீட்டிற்கு வரும்படி ரமாவின் தந்தை வற்புறுத்தினார். ஆனால் அவள் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக காவல் நிலையத்திற்கே சென்று தான் கடத்தப்படவில்லை என்றும், தானே குமாரை திருமணம் செய்து கொள்ளத் தேர்வு செய்ததாகவும் கூறினாள்.*

**கீழ்க்காண்பனவற்றை உங்கள் குழுவில் கலந்தாய்வு செய்ய வேண்டும்.**

1. *இந்த சம்பவத்தில் மீறப்பட்ட விதிகள் எவை? எவ்வாறு?*
2. *இந்த விதி மீறல்களினால், அந்தப் பெண் பிள்ளைக்கு ஏற்பட்ட தாக்கம் என்ன?*

**சம்பவம் – 3**

**கல்வி, வேலை மற்றும் குழந்தைத் திருமணம்**

*ஷ்ரேயா ஒரு வறுமையான குடும்பத்திலிருந்து வந்தவள். மிகுந்த புத்திசாலியாக இருந்தாள். பள்ளியிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றாள். அவளுக்கு இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் பள்ளிக்குச் சென்றனர். சிறப்பு பயிற்சி வகுப்புக்கும் சென்றனர்.*

*அவள் ஒன்பதாம் வகுப்பிற்கு வந்தபின், 15 வயதிலேயே, அவளுடைய பெற்றோர் ஒரு தையல்காரருடன் திருமணத்தை நடத்தி வைத்தனர். திருமணத்திற்குப் பின் அவள் படிப்பைத் தொடர ஆசைப்பட்டாள். ஆனால் அனுமதிக்கப்படவில்லை. அடுத்த மூன்று வருடங்களில் 2 குழந்தைகளுக்கு தாயானாள். மெதுவாக அவளுடைய கணவனின் வியாபாரமும் நலிவடையத் தொடங்கியது. குழந்தைகளுக்கு உணவூட்ட ஏதாவது ஒரு வழியில் சம்பாதிக்கும்படி அவளுடைய கணவனால் தொடர்ச்சியாக சித்திரவதை செய்யப்பட்டாள்.*

*அவளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அருகிலுள்ள அங்கன்வாடியிலுள்ள ஒரு காலிப் பணி இடத்திற்கு விண்ணப்பித்தாள். ஆனால், குறைந்தபட்சக் கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்ததால் அவளுக்கு அந்த வேலை கிடைக்கவில்லை.*

**உங்கள் குழுவில் கீழ்க்காண்பனவற்றை கலந்தாய்வு செய்ய வேண்டும்.**

1. *எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?*
2. *இந்த உரிமை மீறல்களினால் அந்த பெண்ணின் மீது ஏற்பட்ட தாக்கம் என்ன?*
3. *ஷ்ரேயா உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்திருந்தால் அது அவளுடைய வாழ்க்கையில் என்ன மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கும்.?*

**சம்பவம் - 4**

**வன்முறையும் குழந்தைத் திருமணமும்**

*கிராமத்தில் வசிக்கும் 15 வயதான ராதா, தன் உயிர்தோழி மினி சிறப்பு பயிற்சி வகுப்பிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும் வழியில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டாள் என்பதைக் கேட்டு மிகவும் வருத்தம் அடைந்தாள். இத்தகைய நிகழ்வு தன் பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது என்று நினைத்து, ராதாவின் தந்தை உடனடியாக அவளுக்கு, அவளைவிட 14 வயது மூத்தவருடன் திருமணம் செய்துவிட்டார். ராதா மேற்கொண்டு படித்து கணினி இயக்குபவராக வேலைக்கு செல்லவேண்டும் என்று விருப்பப்பட்டாலும், தனது விருப்பத்துக்கு மாறாக அந்தத் திருமணத்திற்கு ஒத்துக்கொண்டாள். மினிக்கு*

நடந்ததைப் போல அவளுக்கும் நடந்தால், சமுதாயத்தை எதிர்கொள்வது கேவலமாக இருக்குமென்றும், தற்கொலை செய்துகொள்வார்கள் என்றும் மிரட்டி அவளுடைய பெற்றோர் அவளைத் திருமணத்துக்குப் பணிய வைத்தனர்.

திருமணமான முதல்நாளே, அவளுடைய மாமனார், மாமியார், அவள் கறுப்பாக இருப்பதற்கு நஷ்ட ஈடாக 30 ஆயிரம் ரூபாய் கொண்டுவரும்படி கூறினர். அத்துடன் அவள் காலையிலிருந்து இரவு வரை எல்லா வீட்டு வேலைகளையும் செய்தாள். எல்லோரும் தூங்கியபின் தான், அவள் தூங்க அனுமதிக்கப்பட்டாள். வரதட்சணை பற்றி அவள் புகுந்த வீட்டார் கேட்ட சமயங்களில் ராதா கொண்டுவர முடியாததால் பட்டினி போடப்பட்டாள். அவள் கணவர் அவளைவிட அதிக வயதில் மூத்தவனாக இருந்ததால், அவளால் அவனிடம் பேசமுடியவில்லை. அவள் தொடர்ந்து கணவனிடம் பணம் கேட்டபோதும், அவனால் அது மறுக்கப்பட்டது. அக்கறையில்லாத கணவன், ஆனால் அவன் விரும்பும்போதெல்லாம் உடலுறவு கொள்வதென்பது அவளுக்குச் சங்கடமாக இருந்தது.

அவளுடைய கணவன் பணியிடத்தில் தன்னுடன் பணிபுரியும் வேறொரு பெண்ணுடன் தொடர்பிலிருப்பது தெரியவரும் வரை, ராதா தனக்கு நேர்ந்து வரும் கஷ்டங்களைப் பற்றி பெற்றோர்களிடம் தெரிவிக்கவில்லை.

**கீழ்க்காண்பனவற்றை உங்கள் குழுவில் கலந்தாய்வு செய்ய வேண்டும்.**

1. எந்த உரிமைகள் மீறப்பட்டுள்ளன? எவ்வாறு?
2. இந்த உரிமை மீறல்களினால் அந்த பெண்ணிற்கு ஏற்படும் தாக்கம் என்ன?

**பயிற்சித் தாள் – 2**

1. ஒவ்வொரு மாதிரி சம்பவங்களிலும் எந்த வகையான உரிமைகள் மீறப்படுகின்றன?
2. இந்த மாதிரி சம்பவங்கள் ஒன்றோடொன்று எப்படி தொடர்புடையவையாக இருக்கின்றன?
3. மனித உரிமை மீறல்கள் எப்படி ஒன்றோடொன்று தொடர்புடையவையாக இருக்கின்றன?
4. இந்த மாதிரி சம்பவங்களில் இருந்து, வளரிளம் பருவத்தில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கைத் தரம் எப்படி இருக்கிறது என்று நம்மால் உணர முடிகிறதா?
5. இவை குடும்பங்களின் மீது எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?
6. இளம் பெண்கள் மீதான இம்மாதிரியான உரிமை மீறல்களால் அவர்கள் எவ்வகையான பாதிப்புக்குள்ளாகிறார்கள்?

# அமர்வு 5

# நான் என்ன செய்ய முடியும்?

**கற்றலின் நோக்கம் :** இந்த அமர்வின் முடிவில் குழந்தைத் திருமணத்தை ஒட்டிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண தாங்கள் என்ன செய்ய முடியும் என்பதை அடையாளம் கண்டு அதை ஒரு அட்டவணையாகத் தயாரித்திருப்பார்கள்.

**நேரம் :** 60 நிமிடங்கள்

**தேவைப்படும் பொருள்கள் :** சார்ட் பேப்பர் மற்றும் இணைப்பு - 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகளின் பிரதிகள்.

**செயல்படுத்தும் விதம் :**

பங்கேற்பாளர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒரு தலைப்பைக் கொடுத்து கலந்துரையாடி எழுதி எடுத்து வரச் சொல்ல வேண்டும்.

1. குழந்தைத் திருமண தடுப்புக்கு முக்கியமான பொறுப்பேற்றிருக்கும் சமூக நலத்துறையினர் மாவட்ட அளவில் என்ன செய்ய வேண்டும்?

2. திருமணம் நடப்பதற்கு முன், நடந்து முடிந்த பின் என்ன செய்ய வேண்டும்?

3. களத்தில் யார் யாருடன் இணைந்து பணியாற்ற வேண்டும்?

குழுவில் கலந்துரையாடிய கருத்துகளைப் பொது அமர்வில் பகிர்ந்து கொள்ள வேண்டும். பின்னர் குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலருக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் என்ற புத்தகத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும்.

அந்தப் புத்தகத்தில் இல்லாத, ஆனால் பொருத்தமான கருத்துக்கள் கலந்துரையாடலில் வந்து இருந்தால், அந்தப் புத்தகத்தின் பின்னால் கொடுக்கப்பட்டுள்ள தாளில் அதை எழுதச் சொல்ல வேண்டும். இறுதியாக பயிற்றுநர் பங்கேற்பாளர்களை உறுதிமொழி எடுக்கச் செய்து நன்றி கூறி பயிற்சியை முடிக்க வேண்டும்.

## உறுதி மொழி

என் பள்ளியிலோ, கிராமத்திலோ, உறவினர் வீடுகளிலோ குழந்தைத் திருமணம் நடப்பதாக தெரிந்தாலோ, நடந்துகொண்டிருந்தாலோ, நடக்கப் போகிறது என்று தெரிந்தாலோ அதைத் தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடுவேன் என்று உறுதிமொழி அளிக்கிறேன். குழந்தைகளின் நலனையே முதன்மையானதாகக் கொண்டு செயல்படுவேன் என்றும் உறுதிமொழி அளிக்கிறேன்.

# இணைப்பு–1

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

### பிரிவு / விதி

1. சமமாக வாழ்வதற்கான உரிமை.
2. பாகுபாடுகளில் இருந்து சுதந்திரம்.
3. வாழ்வு, சுதந்திரம், தனிப்பட்ட பாதுகாப்புக்கான உரிமை.
4. அடிமைத் தனத்திலிருந்து விடுதலை.
5. மோசமாக நடத்தப்படுதல், அவமானப்படுத்தப்படுதலிலிருந்து விடுதலை.
6. சட்டத்திற்கு முன் மனிதர்களாக வாழ உரிமை.
7. சட்டத்திற்கு முன் சம உரிமை.
8. மனித உரிமைகளை ஏற்றுக் கொண்ட நீதிமன்றங்களால் நியாயமாக நடத்தப்படுதல்.
9. தன்னிச்சையாக நியாயமற்ற முறையில் கைது செய்தல் மற்றும் நாடுகடத்தலில் இருந்து விடுதலை.
10. நடுநிலைமையுடன் கூடிய பொது விசாரணைக்கான உரிமை.
11. குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றமற்றவர்தான் என அறியப்படும் உரிமை.
12. அந்தரங்கத்துக்கான உரிமை , யாரும் நம் வீட்டிற்குள் வருவது, நமக்கு வரக்கூடிய தொடர்புத் தகவல்களை சேகரிக்க முயல்வது, நம்மையும் நம் குடும்பத்தாரையும் காரணமின்றி சிரமப்படுத்துவதிலிருந்து உரிமை.
13. நாட்டிற்குள்ளே சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமை.
14. நம் சொந்த நாட்டில் மோசமாக நடத்தப்படும் நிலை வரும் பொழுது வெளிநாடுகளில் அடைக்கலம் பெறுவதற்கான உரிமை.
15. தேச அடையாளத்துக்கான உரிமை.
16. திருமணம் மற்றும் குடும்பத்திற்கான உரிமை.
17. நம் சொந்த பொருட்கள் மீதான உரிமை.

18. நம்பிக்கைக்கும் மதத்தை பின்பற்றுவதற்குமான உரிமை.

19. கருத்து மற்றும் தகவல் அறிவதற்கான உரிமை.

20. அமைதியாகக் கூடவும் அமைப்பாகச் சேரவும் உரிமை.

21. ஜனநாயகத்துக்கான உரிமை.

22. சமூகப் பாதுகாப்புக்கான உரிமை.

23. பணியில் சேரவும், நியாயமான ஊதியம் பெறவும், தொழிற்சங்கங்களில் சேர்வதற்குமான உரிமை.

24. ஓய்வெடுக்கவும் பொழுதுபோக்கவும் உரிமை.

25. போதுமான வாழ்க்கைத் தரத்துக்கான உரிமை.

26. கல்விக்கான உரிமை.

27. சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையில் பங்கெடுப்பதற்கான உரிமை.

28. சுதந்திரமான நியாயமான உலகம்.

29. முழுமையான சுதந்திரமான வளர்ச்சிக்கான சமூகக் கடமைகள்.

30. மேற்கூறிய உரிமைகளை யாரும் பறிக்காமல் இருப்பதற்கான சுதந்திரம்.

# இணைப்பு-2

**குழந்தை த் திருமண தடுப்பு அலுவலர் / மாவட்ட சமூக நல அலுவலருக்கான நிர்ணயிக்கப்பட்ட செயல்பாட்டு வழிமுறைகள் :**

குழந்தைத் திருமண தடுப்பு சம்பந்தமான சட்ட ரீதியான நடவடிக்கைகள் சிறப்பாக அமல்படுத்தப்பட, அனைத்து துறையினரும் இணைந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. சட்டத்தையும், அமல் படுத்த வேண்டிய உடனடி வழிமுறைகளையும் விளக்கும் வழி காட்டியாக இருப்பவை தான் 'SOP' என்றழைக்கப்படும் செயல்பாட்டு வழிமுறைகள்.

குழந்தைத் திருமணங்களை தடுத்து, குழந்தைகளுக்கு அவர்கள் வாழ்க்கையை மீட்டுத் தருவது சமூகத்தில் அனைத்து பெரியவர்களின் கடமை என்றாலும் மாவட்டத்தில் குழந்தைத் திருமணங்களை தடுக்கக்கூடிய மிக முக்கியமான நபராக குழந்தைத் திருமண தடுப்பு அதிகாரி, CMPO ( Child Marriage Prohibition Officer) நியமிக்கப்பட்டுள்ளார்.

குழந்தைத் திருமணம் நிகழும் முன்போ, நிகழும் பொழுதோ அல்லது நிகழ்ந்த பின்னோ, பாதிக்கப்பட்ட குழந்தையின் தரப்பில் மனு தாக்கல் செய்யும் பொறுப்பும் அதிகாரமும் CMPOவுக்கு உள்ளது.

தமிழ் நாட்டில், மாவட்ட சமூக நல அலுவலர் (District Social Welfare Officer) குழந்தைத் திருமண தடுப்பு அலுவலராக (CMPO) நியமிக்கப்பட்டுள்ளார். குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ மற்றும் சட்ட ரீதியான உதவி உள்பட எல்லா விதமான உதவி மற்றும் ஆதரவு அளிக்கவும் CMPOவுக்கு அதிகாரம் உண்டு (section 16 (3) (g), PCMA 2006). மேலும் மாவட்டத்தில் குழந்தைத் திருமணம் நடைபெறாமல் தடுக்கவும் அதற்குரிய அமைப்புகளை இயக்கி PCMA சட்டத்தை வலுப்படுத்துமாறு மாநில அரசிடம் விண்ணப்பிக்கவும் CMPOவால் இயலும்.

**திருமணம் நடக்கப்போவதை கேள்விப்பட்டவுடன் உடனடி செயல்பாடு :**

**ஒரு குழந்தைத் திருமணம் நடக்கபோகிறதென்றால், குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் செய்ய வேண்டியவை :**

- இரு சாரார் வீடுகளுக்கும் நேரில் சென்று, அவர்களின் பெற்றோரிடம் குழந்தைத் திருமணங்கள் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதை சொல்லி புரியவைத்து, அத்திருமணத்தை நடத்த வேண்டாம் என அறிவுறுத்த வேண்டும்.
- 'குழந்தைத் திருமணம் செய்யமாட்டோம்' என்ற அறிக்கையை மேற்கண்டோரிடம் எழுத்துவடிவில் கையொப்பமிட்டு பெற வேண்டும்.

- ஊர் மக்கள், சமுதாயத்தைச்சேர்ந்த பெரியோர், காப்பாளர், உறவினர்களிடம் பேசி, குழந்தைத் திருமணத்திற்கு எதிராக அறிவுறுத்த வேண்டும்.

- குழந்தைகளிடம் பேசி குழந்தைத் திருமணத்தைப் பற்றியும் அதன் விளைவுகளையும் புரியவைத்து, அது குறித்த சட்டங்கள் பற்றிச் சொல்ல வேண்டும். அத்திருமணத்தை மறுக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு என்பதை எடுத்துரைக்க வேண்டும்.

- பெற்றோருக்கு அறிவுறுத்த பஞ்சாயத்து, உள்ளூர் தலைவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள், அரசு சாரா உள்ளூர் அமைப்புகள் ஆகியோரின் உதவியை நாட வேண்டும்.

- நிலைமையை கவனமாக கூர்ந்து கண்காணிக்க வேண்டும். வீட்டிற்குச் சென்று பார்வையிட வேண்டும். பள்ளிக்கு அக்குழந்தை வருகிறதா இல்லையா என்பதை பார்க்க வேண்டும் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

- காவல் துறையினரிடம் புகார் தெரிவித்து, அவர்களது உதவியுடன் குற்றவாளிகளை கைது செய்யலாம். 151-ஆவது பிரிவின் கீழ் கண்டறியக்கூடிய குற்றத்தை தடுக்கும் வகையில் கைது செய்யும் அதிகாரம் காவல் துறையினருக்கு உண்டு.

- பெற்றோர்கள் திருமணத்தை நிறுத்த மறுத்தால், 13ஆம் பிரிவின் கீழ் குழந்தைத் திருமணத்தடை உத்தரவு அளிக்கும் படி முதல் வகுப்பு நீதிபதியிடம் புகார் அளிக்க வேண்டும்.

**குழந்தைத் திருமணம் நடந்துகொண்டிருக்கிறது என்றால், குழந்தைத் திருமணத் தடுப்பு அலுவலர் செய்யவேண்டியவை :**

- உடனடியாக அந்தத் தகவலை முதல் வகுப்பு நீதிபதியிடம் தெரிவித்து தடை உத்தரவு வாங்க வேண்டும் .

- திருமணம் நடக்கிறது என்பதற்கு ஆதாரங்களை சேகரிக்க வேண்டும் (புகைப்படம், திருமணப் பத்திரிகை, திருமணத்திற்காக செய்யப்பட செலவினங்களின் ரசீதுகள் அல்லது சீட்டுகள் ஆகியவற்றை சேகரிக்கலாம்)

- அக்குழந்தைத் திருமணத்தை நடத்திவைப்பவர்கள், ஒப்பந்தம் செய்தவர்கள், ஏற்பாடு செய்தவர்கள், துணை நிற்பவர்கள், ஆதரவாளர்கள், ஊக்குவிப்பவர்கள், அங்கு பங்குபெற்றவர்கள் என அதற்கு தொடர்புடைய அனைவரின் பெயர்களையும் பட்டியலிட வேண்டும்.

- காவல் துறையினரிடம் புகார் தெரிவித்து, அவர்களது உதவியுடன் குற்றம் செய்ததாகக் கருதப்படுபவர்களை கைது செய்ய வேண்டும். 151ஆவது பிரிவின் கீழ் கண்டறியக்கூடிய குற்றத்தை தடுக்குமாறு கைது செய்யும் அதிகாரம் காவல் துறையினருக்கு உண்டு.

- குழந்தைகள் திருமணத்திற்காக கட்டாயப்படுத்தப்பட்டோ, பயமுறுத்தப்பட்டோ இருந்தால், அல்லது அந்த குழந்தையின் உயிருக்கு எந்தவித ஆபத்தோ இருந்தால் உடனடியாக அந்த குழந்தையை, குழந்தை நலக் குழுவின் முன்போ அல்லது முதல் வகுப்பு நீதிபதியின் முன்போ ஆஜர் படுத்தி பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதுவரை அந்த குழந்தையை மாநில அரசு அங்கீகாரம் பெற்ற குழந்தைகள் காப்பகத்தில் இருக்கச் செய்ய வேண்டும்.

- அவர்களை மீட்ட பின் மருத்துவ உதவி, சட்ட உதவி, மன நல ஆலோசனை, மறுவாழ்வு ஆதரவு போன்ற எல்லா விதமான உதவிகளையும் ஆதரவையும் அளிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

**குழந்தைத் திருமணம் நடந்துவிட்டது என்றால், குழந்தைத் திருமண தடுப்பு அலுவலர் செய்யவேண்டியவை :**

- எவ்வாறு திருமணம் நடந்தது என்பதற்கு ஆதாரங்களை சேகரிக்க வேண்டும் (புகைப்படம், திருமணப் பத்திரிகை, திருமணத்திற்காக செய்யப்பட செலவினங்களின் ரசீதுகள் அல்லது சீட்டுகள், சாட்சிகள் ஆகியவற்றை சேகரிக்கலாம்).

- அக்குழந்தைத் திருமணத்தை நடத்தி வைத்தவர்கள், ஒப்பந்தம் செய்தவர்கள், ஏற்பாடு செய்தவர்கள், துணை நின்றவர்கள், ஆதரவாளர்கள், ஊக்குவித்தவர்கள், அங்கு பங்குபெற்றவர்கள் என தொடர்புடைய அனைவரின் பெயர்களையும் பட்டியலிட வேண்டும்.

- காவல்துறையினரிடம் புகார் அளித்து அவர்களது உதவியுடன் குற்றவாளிகளைக் கைது செய்ய வேண்டும்.

- குழந்தைத் திருமணங்கள் நடக்க உதவியாய் இருந்த பெண்களும் குற்றவாளிகளாகவே கருதப்படுகிறார்கள். ஆனால், பெண்களை கைது செய்யக் கூடாது. அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய அபராதங்கள் மற்றும் தண்டனைகள் நீதிமன்றங்களாலேயே தீர்மானிக்கப்படும்.

- பாதிக்கப்பட்ட குழந்தையை உடனடியாக அல்லது 24 மணிநேரத்திற்குள் 2000 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் குழந்தை நலக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவரை குழந்தையை 2015 ஆம் ஆண்டு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின் கீழ் (Juvenile Justice Act) பதிவு செய்யப்பட்ட மாநில அரசு அங்கீகாரம் பெற்ற காப்பகத்தில் அந்தக் குழந்தையைப் பாதுகாப்பாக இருக்கச் செய்ய வேண்டும்.

- குழந்தை நலக்குழு அம்மாவட்டத்தில் இல்லை என்றால் அக்குழந்தையின் பாதுகாப்பினை நிர்ணயிக்க முதல் வகுப்பு நீதிபதியின் முன் ஆஜர் செய்ய வேண்டும்.
- எந்தக் காரணத்தைக் கொண்டும், எப்பொழுதும் பாதிக்கப்பட்ட குழந்தை அல்லது குழந்தைகளை காவல் நிலையத்தில் இருக்க வைக்கக் கூடாது.
- அக்குழந்தையை மீண்டும் மீண்டும் தன் வாக்குமூலத்தை வெவ்வேறு அதிகாரிகளிடம் கூறச் செய்து மேலும் அவர்களை புண்படுத்தக்கூடாது.
- தேவையற்ற மருத்துவப் பரிசோதனைகளோ மகளிர் நல பரிசோதனைகளோ செய்யக்கூடாது. எந்த ஒரு பரிசோதனையும் அக்குழந்தைகளிடமும் அவர்களது பெற்றோர்/காப்பாளர்/அடுத்த நெருங்கிய நண்பர்கள் ஆகியோரிடம் விளக்கி ஒப்புதல் பெற்று தான் செய்ய வேண்டும்.
- அவர்களை மீட்ட பின் மருத்துவ உதவி, சட்ட உதவி, மன நல ஆலோசனை, மறுவாழ்வு ஆதரவு போன்ற எல்லா விதமான உதவிகளையும் ஆதரவையும் அளிக்க தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- அக்குழந்தையை மீண்டும் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கூடாது. ஆதாரங்கள் மற்றும் குறுக்கு விசாரணைகளை ஒரே நாளில் நிகழ்த்த முயற்சி செய்ய வேண்டும்.
- CMPO பல விதங்களில் முன்னெச்சரிக்கையாக, குழந்தைத் திருமண தடுப்புக்காகவும், குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தண்டிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னென்ன அமைப்புகள் தேவைப்படுகிறது என்று ஆய்வு செய்து மாநில அரசிடம் விண்ணப்பிக்கலாம். உதாரணமாக, விரைவு நீதி மன்றங்கள் அமைக்குமாறு வலியுறுத்தலாம்.
- பாதிக்கப்பட்ட குழந்தைகள் பெற்றோருடன் தங்கியிருந்தால், அவர்களை முறைப்படி அடிக்கடி பார்வையிட வேண்டும். முடிந்தவரை அந்த குழந்தையை அவர்கள் வீட்டிலிருந்து அகற்றக்கூடாது. அவ்வாறு செய்ய வேண்டிய சூழல் இருந்தால் அத்தகைய முடிவு அக்குழந்தையின் சிறந்த நலனை கருதியே எடுக்கப்படவேண்டும்.
- தேவைப்பட்டால் உள்ளூர் அரசுசாரா அமைப்புகள் (NGOS) மற்றும் சமூகம்சார் அமைப்புகள் (CBOS) ஆகியவற்றின் உதவியை நாடலாம்.
- பாதிக்கப்பட்ட குழந்தைக்கு எதிராக வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்ய வேண்டும்.

### நீதிமன்றத்திடம் புகார் பதிவு செய்தபின் செயல்பாடு :

- வாக்குமூலம் பதிவுசெய்யப்படும்போது அங்கே இருக்க வேண்டும்.
- அருகில் உள்ள காவல் நிலையம்/நீதிமன்றத்தை அணுகி அலுவலக ஆணை *(official order)* பெற வேண்டும்.
- முழுமையாக அக்குழந்தையின் தேவைகளையும், வீட்டு சூழ்நிலையையும் மதிப்பிட வேண்டும். ***(Home Study and Needs Assessment)***
- விசாரணைகள் நடக்கும்போது பாதிக்கப்பட்ட குழந்தைக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.
- இந்நிகழ்வுக்குப்பின் குழந்தை பெற்றோரால் ஏற்கப்படவில்லை என்றால் குழந்தையின் நீண்ட கால மறுவாழ்வு மற்றும் பாதுகாப்பு குறித்து திட்டமிட வேண்டும்.
- குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ மற்றும் சட்ட ரீதியான உதவி உள்பட எல்லா விதமான உதவி மற்றும் ஆதரவு அளிக்கவும் *CMPO*வுக்கு அதிகாரம் உண்டு *(section 16 (3) (g), PCMA 2006).*

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

# குறிப்புகள்